# இந்தியத் துணைத் தூதரகம்

## யாழ்ப்பாணம்

## ஊடக அறிக்கை

## இந்துக் கற்கைகள் பீடத் துவக்க விழாவில் நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தனியான இந்துக் கற்கைகள் பீடத்தின் துவக்க விழா இன்று (06 யூன் 2019) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. யாழ் இந்தியத் துணைத் தூதுவர் சங்கர் பாலச்சந்திரன் அவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டு இலங்கை ரூபாய் 200,000/- ற்கும் மேற்பட்ட பெறுமதியுடைய இந்து சமயம் சார்ந்த நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். இந்துக் கற்கைகள் பீடத்தின் சார்பாக யாழ் பல்கலைக் கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி மற்றும் பேராசிரியை முனைவர் சுகந்தினி முரளீதரன், பேராசிரியர் சுதாகர், மூத்த விரிவுரையாளர் பத்மநாதசர்மா ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

யாழ் பல்கலைக் கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி அவர்கள் இப் பெறுமதியான நூல்களை இந்துக் கற்கைகள் பீடத்திற்கு வழங்கியமைக்காக இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்ததுடன் இப் புதிய பீடமானது சிறப்பான முறையில் நடாத்தப்படுவதற்கு வேண்டிய நிதி ஆதரவினை இந்திய அரசாங்கம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

****

யாழ்ப்பாணம்
யூன் 6, 2019